29.07.2025.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண். 20/2019</u>

அ.சா.20

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வீரன் | | |
| த/பெ | கண்ணன் | | |
| கிராமம் | டி.எடைப்பாளையம் | தொழில் | விவசாயம் |
| தாலுக்கா | திருவெண்ணெய்நல்லூர் | வயது | 58/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 29.07.2025 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன அப்துல் ஜபாரை எனக்கு தெரியும். எனக்கு ஆஜர் எதிரிகளில் மோகன், ரவி, முஸ்தபா ஆகியோர்களை எனக்கு தெரியும். அப்துல் ஜபார் இறந்து விட்டார். அது சம்மந்தமாக நான் எதுவும் பார்க்கவில்லை. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் மாமியார் வீட்டிற்கு சென்று விட்டேன். 2 நாட்கள் கழித்து வீட்டிற்கு வந்த போது அப்துல் ஜபார் கொலை செய்தது சம்மந்தமாக கேள்விபட்டேன்., பிறகு அவர் பிரேதத்தை வீட்டில் சென்று பார்த்தேன். விசாரித்ததில் அவர் கொலை செய்யப்பட்டதாக தெரிந்துக்கொண்டேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு

ஒன்றும் தெரியாது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். மேற்படி சங்கதிகளை நான் போலீசார் விசாரணையில் சொல்லிக்கொண்டேன்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

கடந்த 27/06/2018 ந் தேதி மதியம் சுமார் 2 . 30 மணியளவில் நிலத்தில் வேலையை முடித்துக்கொண்டு வீட்டிற்கு செல்ல அப்துல் ஜபார் என்பரைவ வீட்டின் பின்புறம் உள்ள கரும்பு தோட்டம் அருகே நின்று கொண்டிருந்தேன் என்றும், அப்போது அப்துல் ஜபாரின் வீட்டின் பின்புறம் உள்ள கரும்பு தோட்டத்தின் வரப்பில் எங்கள் ஊரைச் சேர்ந்த மோகன் அவருடைய தம்பி ரவி மற்றும் அவரது வீட்டிற்கு வந்த ஒரு பையன் அந்த வரப்பில் வேகமாக நடந்து சென்று கொண்டிந்தார்கள் என்றும், அன்று மாலை 6. 25 மணிக்கு அப்துல் ஜபார் அவரது பண்ணை வீட்டில் கொலை செய்யப்பட்டு கிடக்கிறார் என்று கேள்விபட்டேன் என்றும், பிறகு நான் அங்கு சென்று பார்த்தேன் என்றும், அப்போது ஏற்கனவே மோகனுக்கும், அப்துல் ஜபாருக்கும் நடந்த ஒரு பஞ்சாயத்தில் அசிங்கப்படுத்தியது சம்மந்தமாக அப்துல் ஜபார் மீது மோகன் விரோதம் கொண்டிருந்தான் என்றும், மதியம் நான் பார்த்த மோகன் மற்றும் ரவி பெங்களூரை சேர்ந்த ஒரு பையன் ஆகியோர்கள் சேர்ந்து தான் அப்துல் ஜபாரை கொலை செய்திருக்க வேண்டும் என்றும், சந்தேகம் உள்ளதாக போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் ஊர்க்காரர்கள் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

**மறுவிசாரணை**

**இல்லை**